செய்தி வெளியீடு எண்:27 நாள்: 8.1.2008

# சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 16 மருத்துவர்கள், 20 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் கடந்த 5 வருடங்களாக காலியாக இருந்த 200க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் முதல் கட்டமாக 18 மருத்துவர்கள், 2 கால்நடை மருத்துவர்கள், 8 மருந்தாளுநர்கள், 2 செவிலியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல்கள் பெறப்பட்டு சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் பணியமர்த்தப்பட்டார்கள்.

அதே போன்று மாவட்ட குடும்ப நலத்துறையில் 2004ம் ஆண்டில் தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்ட 32 மருத்துவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் பணி நிரந்தரம் செய்யப்பட்டு சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதே நிகழ்ச்சியில் 10 மருத்துவர்களுக்கு நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்போது மேலும் பொது சுகாதாரத்துறையில் 7 மருத்துவர்கள், 2 செவிலியர்கள், மாவட்ட குடும்ப நலத்துறையில் 9 மருத்துவர்கள், 18 செவிலியர்கள் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகள் இன்று (8.1.2008) வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 16 மருத்துவர்கள், 20 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இதன் மூலம் சென்னை மாநகரில் வாழும் அனைத்து மக்களுக்கும் சுகாதார வசதி நலவாழ்வு மையங்களில் அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார். ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, நிலைக்குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன், நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி.முத்துகிருஷ்ணன், திரு.மு.வேலாயுதம், கூடுதல் ஆணையர்(கல்வி) திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப. மற்றும் மாநகராட்சி சுகாதார அலுவலர்கள் உடன் இருந்தனர்.

*********

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.